1971 டிசம்பர் 13]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தமிழ்நாடு மின்சார வாரியப்பணியாளர் சம்பள விதங்கள் 1—12—1969 நாளிலிருந்து செயல்படுமாறு 1970-மேத் திங்களிலும், ஜுன் திங்களிலும் மாற்றி அமைக்கப்பட்டன.

பழைய சம்பள விதங்களையும் புதிய சம்பள விதங்களையும் காட்டுகிற விவர அறிக்கை † பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீநகரில் அனைத்துஇந்திய போக்குவரத்து ஏற்பாடு

*340. **வினு—திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) 16—8—1971 அன்று போக்குவரத்து அமைச்சர் அவர் கள் ஸ்ரீநகரில் நடைப்பெற்ற அகில இந்திய போக்குவரத்து மாநாட்டில் கலந்து கொள்ளச்சென்றுரா?

(இ) ஆம் எனில், அங்கு எடுக்கப்பட்ட முடிவுகள் யாவை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) போக்குவரத்து மேம்பாட்டு மன்றத்தின் ஒன்பதாவது கூட்டம் 1971 ஆகஸ்டு 18, 19 நாட்களில் ஸ்ரீநகரில் நடந்தது. அதில், போக்குவரத்து அமைச்சரும் மாநில அரசின் ஏனைய அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

(இ) கூட்டத்தின் முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

திரு. கே. ஏ. வகாப் : பேரவைத் தலைவரவர்களே, இந்த இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள மற்ற மாநிலங்கள் எல்லாவற்றையும் விட கேரளாவில் போக்குவரத்து இலாக்கா மிகவும் சீராக பணியாற்றி வருகிறது என்று சொல்கிறுர்கள். எனவே, அம்மாநிலத்தின் போக்குவரத்து இலாக்காவின் நடைமுறைகளை இம் மாநிலமும் பின்பற்ற ஆலோசனை செய்து பலன் பெற முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர் களே இந்த மாநாட்டில் இந்தியத் துணைக்கண்டத்தின் பொதுப் படையான போக்குவரத்து பிரச்னைகள் மட்டுமே பேசப்பட்டன. கேரள மாநிலத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் சொன்னுர் கள். அம் மாநிலத்தில், சென்னையைப் போல ஒரு பெரிய நகராம் இல்லை என்பதைக் கூற விரும்புகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே. பக்கிங்காம் கால்வாயில் போட் விடலாம் என்ற யோசனை இருந்தது. அந்த யோசனை ஸ்ரீநகரில் விவாதிக்கப்பட்டதா? மத்திய அரசு என்ன சொன்னது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவ ரவர்களே, பக்கிங்காம் கால்வாய் விரிவு படுத்தப்பட வேண்டும், மேம்பாடு செய்யப்பட வேண்டும், அதை போக்குவரத்துக்கு

(† [redacted]ம் பக்கத்தில் மூன்றும் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.

உகந்ததாக ஆக்க வேண்டும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. அதற்கு ஒரு தனி ஸ்டடி டீம் போட்டிருக்கிறார்கள். நாம் கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்த ஸ்டடி டீம் போடப்பட்டிருக்கிறது. ஆறு மாதம் என்று கால நிர்ணய வரையறை செய்து ரிப்போர்ட் கேட்டிருக்கிறார்கள். அந்த ரிப்போர்ட்டை தருவார்களேயானால். அதன் மேல் மத்திய அரசு பரிசிலனை செய்வதாக ஒப்புக் கொண்டுள்ளார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், நகரத்தில்தான் அதிகமான கஷ்டம் இருக்கிறது. காலையிலும் மாலையிலும் அதிகமானவர்கள் பஸ்களில் பிரயாணம் செய்கிறார்கள். ஆகவே. அந்த நேரங்களில் கண்டக்டர்களுக்கு கஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, அந்தக் குறிப்பிட்ட நேரங்களில், நிரந்தரமாகவே, ஒவ்வொரு பஸ்ஸுக்கும் இரண்டு கண்டக்டர்களை போட அரசு முடிவு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மூலக்கேள்விக்கும் இக்கேள்விக்கும் தொடர்பே இல்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

THIRU K. T. K. THANGAMANI : It arose out of the reply to the supplementary.

அரிசன நல கூட்டுறவு போக்குவரத்து சங்கம், மதுரை

***341. வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் அரிசன நல கூட்டுறவு போக்குவரத்து சங்கம் அமைக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அச்சங்கத்தின் சார்பில் எத்தனை பேருந்துகள் எங்கெங்கு விடப்படுகின்றன?

மாண்புமிகு திரு. ச. இராமசந்திரன் : (அ) ஆம்.

(இ) இச்சங்கம், மதுரை மாவட்டத்தில் கீழ்க்காணும் வழித்தடங்களில் இரண்டு பேருந்துகளை இயக்கி வருகிறது.

(1) மதுரையிலிருந்து முதுவார்பட்டி வரை.

(2) மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திலிருந்து திருமங்கலம் வரை.

திரு. பி. எஸ். மணியன் : தலைவரவர்களே, இந்தப் போக்குவரத்துச் சங்கம் நல்ல லாபத்தில் நடைபெறுவதாக அறிகிறோம். ஆகவே, இந்தச் சங்கத்திற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் இன்னும் பல பஸ் ரூட்கள் இந்தச் சங்கத்திற்கு அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.